பக்கங்கள் 14+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 05 திங்கட்கிழமை 21.07.2024 | அதிர்வு 352

## இளைஞர்கள் இருவர் வாவியில் மூழ்கிப் பலி!



வாவியில் மூழ்கி இளைஞர்கள் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து!

## 25 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்



கேகாலையில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் 25 பேர் காயமடைந்துள்ளனர்.

கேகாலை, கலிகமுவ பகுதியில் இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

வெரகொடவில் இருந்து கேகாலை நோக்கிப் பயணித்த இலங்கை 05

## மக்களின் பேராதரவுடன்

# அநுர அரசை மிக விரைவில் வீட்டுக்கு விரட்டியடிப்போம்



## ஐக்கிய மக்கள் சக்தி சூளுரை

“மக்களின் ஆணைக்கு மாறாகச் செயற்படும் அநுர அரசை மக்களின் பேராதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு அனுப்பிவைப்போம்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார். 03

# உதைப்பந்தாட்டக் கோல் கம்பம் வீழ்ந்து இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக மரணம்

## நாவாந்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் துயரம்



(ந.லோகதயாளன்)

யாழ். நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் உதைப்பந்தாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கோல் கம்பம் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

யுவராஜ் செபஸ்தியாம்பிள்ளை என்ற 29 வயது இளைஞரே இந்தச் சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உதைப்பந்தாட்டம் விளையாடிய இளைஞர் மீது கோல் கம்பம் வீழ்ந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் சிகிசை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.




# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைெ பற்று பாரம்பரிய முறைப்படி கொடிச் சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டு வண்டில் மூலம் நல்லூரில் இருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இம்மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள் ளமை குறிப்பிடத்தக்கது.













# திருக்கோவில் ஆடி அமாவாசை திருவிழாவில் 500 மாணவர்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை திருவிழாவில் ஒரே தடவையில் 500 மாணவர்கள் கலந்துகொண்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமாரின் ஒழுங்கமைப்பில் சங்கீத ஆசிரியர்களின் பெரும் ஏற்பாட்டில் இந்த ஐந்நூறு மாணவர்கள் கலந்துகொண்டனர்.

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமியின் மனம் குளிர அவர்கள் கந்தசஷ்டி கவசம் மற்றும் திருப்புகழ் பாராயணம் செய்து வரலாற்றுச் சாதனை புரிந்தார்கள். ஆலயக் குருவும் அருளுரை வழங்கினார்.

தினமும் அங்கு பகல் இரவு திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.


எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.













## அநுர அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த அரசு ஆட்சிக்கு வந்ததால் மக்களுக்கு எந்தவித பயனும் ஏற்படவில்லை.

அநுர தரப்பினர் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானவை என்று தற்போது நிரூபணமாகியுள்ளன.

ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகளையே இந்த அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

மக்களின் ஆணைக்கு மாறாகச் செயற்படும் இந்த அரசை மக்களின் பேராதரவுடன் மிக விரைவில் வீட்டுக்கு அனுப்பிவைப்போம்.

ஐக்கிய மக்கள் சக்தியை ஆட்சிப் பீடத்தில் மக்கள் அமர்த்துவார்கள். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் குறுகிய காலத்தில் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம்.” – என்றார்.

# யாழில் ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்த இளைஞர் சாவு!



யாழ்ப்பாணத்தில் ஊசி மூலம் போதைப் பொருளை உடலில் செலுத்தி வந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்த 26 வயது இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மேற்படி இளைஞர் கடந்த 5 வருடங்களாக ஊசி மூலம் போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்துள்ளார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மயக்கமடைந்த நிலையில் வீட்டில் காணப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, நண்பர்கள் அவரை யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரி ழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.




## இரு பஸ்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் கேகாலையில் இருந்து இரத்தினபுரி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் 25 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் கேகாலை மற்றும் வரக்காப்பொல வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம் , உடவளவையில் உள்ள பனாக்கடுவ வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மற்றைய நபரின் சடலத்தைத் தேடும் நடவடிக்கை தொடர்கின்றது.

29 மற்றும் 30 வயதுடைய இருவரும் பனஹடுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இருவரும் நீரில் மூழ்கியதை அவதானித்த நபர் ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மற்றும் இலங்கை இராணுவத்தின் உயிர்காக்கும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்து தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இதன்போது ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மற்றைய நபரின் சடலத்தைக் கண்டுபிடிக்கும் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.




**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய மொந்தையில் பழைய கள்

நாடாளுமன்றப் பெரும்பான்மை - அதுவும் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பெரும்பான்மை - தன் கைவசம் இருக்கின்றது என்பதற்காக தன் இஷ்டப்படி சட்டங்களைக் கொண்டு வருவதற்கு ஆட்சிப் பீடம் முயலக் கூடாது. அதுவும் துறைசார் விடயங்களில் அந்தந்த துறைகளின் நிபுணத்துவ தரப்புக்களின் சரியான ஆலோசனைகளும் பொது நியதிகளும் கவனத்தில் கொள்ளப்படாமல் ஆட்சி பீடம்தன்இஷ்டப்படிசட்டங்களையோ நிர்வாக முறைமைகளையோ மாற்றி அமைக்கக் கூடாது.

அப்படிப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் இப்போது குரல் எழுப்பப் பட்டிருக்கின்றது.

நம்மத்தியில் அடிக்கடி பேசப்படும் ஒரு விடயம் கல்விச் சீர்திருத்தம் ஆகும். தற்போதைய அரசு 2026 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தங்களைக் கொண்டு வர இருப்பதாக அறிவித்திருக்கிறது. ஆனால் அது உரிய தரப்புகளின் கலந்தாலோசனையின்றி ஒருதலைப் பட்சமாக முன்னெடுக்கப்படுவதாக இப்போது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அடுத்த ஆண்டில் வரவிருக்கும் கல்வி சீர்திருத்தங்கள் மாணவர்கள் மீதான சுமையை மேலும் அதிகரிக்கும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளிப்படையாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இப்போது இருக்கின்ற கல்வி முறை மாணவர்களுக்கு மிகவும் சிரமமாகி விட்டதால், அனைத்து கல்வி தொழிற் சங்கங்களும் தொடர்ந்து சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுத்து வருகின்றன என்பது உண்மைதான்.

"ஒரு சீர்திருத்தம் அவசரமாகத் தேவைப்பட்டாலும், அரசாங்கம் இப்போது அறிமுகப்படுத்துவது புதியதல்ல. இந்தச் சீர்திருத்தங்கள் 2018 முதல் பேசப்பட்டு வந்த விடயங்கள்தாம். உண்மையான மாற்றத்திற்குப் பதிலாக, அரசாங்கம் பழைய கொள்கைகளை மீண்டும் தொகுத்து புதிய சீர்திருத்தங்களாக முன்வைக்கிறது." - என்று ஸ்டாலின் விவரிக்கின்றார்.

ஆக, புதிய கல்விச் சீர்திருத்தம் என்பது 'புதிய மொந்தையில் பழைய கள்' போன்றதுதான் என்பதே நிலைமை.

சீர்திருத்தங்கள், மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கு முன்பு கல்வி நிபுணர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் போன்ற தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கத் தவறியுள்ளனர் என்றும் ஜோசப் ஸ்டாலின் அரசாங்கத்தை விமர்சித்தார்.

"உதாரணமாக, பாடசாலை நேரத்தை மதியம் 1:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை நீட்டிக்கும் முடிவு எந்த ஆலோசனையும் இல்லாமல் எடுக்கப் பட்டது. பாரம்பரியமாக, இத்தகைய முடிவுகள் கல்வி உளவியலாளர்கள் மற்றும் குழந்தை நல நிபுணர்களின் ஆலோசனையின் அடிப்படையில், மாணவர்களின் சமாளிக்கும் திறனைக் கருத்தில்கொண்டுஎடுக்கப்படுகின்றன. அப்படிச் செய்வதுதான் முறை"-என்று ஸ்டாலின் குறிப்பிட்டார்.

இப்போது முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் முதலில் ரணில் விக்கிரமசிங்க நிர்வாகத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டன. அப்போது அவை நிராகரிக்கப்பட்டன. இப்போது, அதே சீர்திருத்தங்களின் சில பகுதிகள் வேறு 'லேபிளின்' கீழ் மீண்டும் அறிமுகப் படுத்தப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

"தொழில்முனைவோரை வளர்க்கும் மற்றும் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்யும் ஓர் அர்த்தமுள்ள கல்விச் சீர்திருத்தம் நமக்குத் தேவைப் பட்டாலும், அரசாங்கம் அதை ஆய்வு மற்றும் சரியான ஆலோசனையின் அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும். அதற்கு பதிலாக, காலாவதியான கொள்கைகளை மறுசுழற்சி செய்வதை நாம் காண்கிறோம்" என்று அவர் குறை கூறுகின்றார்.

ஆக, உரிய தரப்புகள், பங்காளிப் போரின் கலந்தாலோசனையுடன்யான் இவற்றைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கிண்ணியா தோணா கரையோரத்தில் உள்ள வியாபார நிலையக் கட்டடங்களை அகற்றுக!

## உரிமையாளர்களுக்கு கடிதங்கள், பாதிக்கப்பட்டோர் முறையீடு

(ஏ.எச்.ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தால் கிண்ணியா தோணா கரையோரத்தில் உள்ள வியாபார நிலையங்கள் உள்ளிட்ட கட்டடங்களை அகற்ற கோரி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.



இதனால் உறுதிக் காணி உள்ளவர்கள், மீனவர்கள் உள்ளிட்ட பலர் தமது வாழ்வாதாரங்களை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபிடம் முறையிட்டனர். இது தொடர்பாக கிண்ணியா அபிவிருத்தி குழு கூட்டத்தில் கொண்டு வந்த பிரேரணையின் பின்னர் கரை யோர பகுதிக்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு எடுக்க பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய தரப்புடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடினார்.

இதன்போது கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம். மஹ்தி, கிண்ணியா நகர சபை செயலாளர் அனீஸ், நகர சபை உறுப்பினர் ரசாத், முன்னாள் நகர சபை உறுப்பினர் கலிபதுல்லாஹ், கிண்ணியா மீனவ சங்க தலைவர் பாயிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 11 - 1948 | 21 - 07 - 2025 |



## விமலராஜன் கனகநாயகம் வில்லியம்

**(முன்னாள் வட-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர், வடமாகாண விளையாட்டுத்துறை ஆலோசகர்)**

“நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன்” [2 திமோத்தேயு 4:7)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகநாயகம் வில்லியம் விமலராஜன் அவர்கள் 21.07.2025 ஆம் திகதி திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி டேவிட் கனகநாயகம் பியற்றிஸ் தவமலர் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி E.T. ஸ்கோட், பியற்றிஸ் செல்வமலரின் பாசமிகு மருமகனும், இவாஞ்சலின் இந்திராணி அவர்களின் அன்புமிகு கணவரும், டேவிட் ஜெயக்குமார்(குமார்,திருகோணமலை), பியற்றிஸ் கிறிஷ்ஷாந்தி (Chrisho,கொழும்பு)ஆகியோரின் பாசதிகு தந்தையும், காலஞ்சென்ற R.K. Jeyarajah (உரிமையாளர் (PAN - AM Foods),அமுத செல்வி ஜோன் பிறேமசந்திரன் (அவுஸ்ரேலியா) அவர்களின் பாசமிகு சகோதரனும், யெசி கிறோசியினி (திகோணமலை) டெஸ்மண்ட் பிரதீப் (Colombo) அவர்களின் பாசமிகு மாமனாரும், றோகன் அபியூத் பாசமிகு அப்பப்பாவும் Selvan Scott, திருமதி காந்தி Jeyarajah (அவுஸ்ரேலியா), ஜீவா பிரேமச்சந்திரன் (அவுஸ்ரேலியா) காலஞ்சென்ற ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.07.2025) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் ஆராதனை செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள கொட்டடி மெதடிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**(0779221293)**




# சட்ட விரோத மணல் அகழ்வால் வெருகல் மக்கள் பெரும் பாதிப்பு

## திருகோணமலை எம்.பி. இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

வெருகல் நாதன் ஓடையில் மணல் அகழ்வுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இங்கு மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் தமக்கு வழங் கப்பட்ட அளவுக்கு அதிகமாக சட்ட விரோதமான முறையில் மணல் அகழ் வில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் கார ணமாக மாரி காலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். வெருகல் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது இதன் போது தனது பிரேரனைகளை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அனுமதி வழங்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக மணல் அகழ்வதையும், புதிதாக மணல் அகழ்விற்கு அனுமதி வழங்குவதனையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

எனவே, வெள்ளப்பெருக்கு, சுற் றாடல் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட அனுமதிக்கு மேலதிகமாக மணல் அகழ்வதனையும், புதிதாக மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்காதிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முத்துச்சேனை பொது விளையாட்டு மைதானம் விளையாட முடியாத அள வுக்குப் குன்றும், குழியுமாகக் காணப் படுகின்றது. இதன் காரணமாக இப் பகுதியிலுள்ள விளையாட்டு வீரர்கள் தமது விளையாட்டு திறமைகளை வெளிக்கொணரமுடியாத நிலையில் உள்ளனர்.

அருகிலுள்ள முத்துச்சேனை அர சினர் கலவன் பாடசாலையும் மேற்படி மைதானத்தையே பயன்படுத்தி வரு கின்றது. எனவே, முத்துச்சேனை கிராமத்திலுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் முத்துச்சேனை அரசினர் கலவன் பாடசாலை மாணவர்கள் ஆகி யோரது நலன்கருதி மேற்படி மைதா னத்தை விளையாடுவதற்கு ஏற்ற வகையில் புனரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெருகல் பிரதேச செயலக பிரிவின் எல்லை சரியாக அடையாளப்படுத்தப் படாமையால் சேருவில பிரதேசத்தைச் சேர்ந்தவர்களால் வெருகல் பிரதேசத் திலுள்ள காணிகள் அபகரிக்கும் செயற் பாடுகள் அதிகரித்து வருகின்றன.

எனவே, வெருகல் பிரதேச செயல கத்துக்கு உரிய எல்லையை நான்கு பக்கமும் அடையாளப்படுத்தி எல்லை யிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் .

இது போன்று வாழைத்ததோட்டம் கிராமிய வைத்தியசாலையை அப்பகுதி யைச் சூழவுள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின் றனர். இந்த வைத்தியசாலைக்கு நிரந் தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப் படாமையால் வேறொரு வைத்திய சாலையில் இருந்து வருகைதரும் வைத்தியர் தினமும் காலை 8.30 மணியிலிருந்து 10 மணிவரை மாத்திரம் கடமையாற்றி வருகின்றார். 10 மணிக் குப் பிறகு சுகவீனமடைவோர் தூ ரத்திலுள்ள ஈச்சிலம்பற்று வைத்திய சாலைக்கு செல்லவேண்டியுள்ளது. போக்குவரத்துப் பிரச்சினை, பொரு ளாதார பிரச்சினைகள் காரணமாக இங்குள்ள மக்களால் ஈச்சிலம்பற்று வைத்தியசாலைக்கு செல்வது சிரம மானது. எனவே, வாழைத்ததோட்ட கிராமிய வைத்தியசாலைக்கு நிரந்த ரமாக வைத்தியர் ஒருவரை நியமிப் பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முத்துச்சேனை, மாவடிச்சேனை எனும் முகவரியில் வசிக்கும் திருமதி சிவபாலன் அஜந்தினி என்பவரின் தந்தைக்குச் சொந்தமான இரண்டரை ஏக்கர் காணி வாழைத்தோட்டம் விளை யாட்டு மைதானத்துக்கு முன்பாக வுள்ளது. இதில் ஒரு ஏக்கர் காணியில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். அவரின் தாய் தந்தையினர் சிறுவய திலேயே இறந்துவிட்டனர். இந்த நிலை யில் இவர் உறவினரின் வீட்டில் வசித்து வருகின்றார். மிகுதி ஒன்றரை ஏக்கர் காணியைத் தனக்கு பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே, இராணுவத்தினரின் பாவ னையில் இருக்கும் 1 ஏக்கர் காணியை தவிர்த்து மிகுதி ஒன்றரை ஏக்கர் காணியைக் காணி உரிமையாளர் சிவபாலன் அவர்களின் மகளான சிவபாலன் அஜந்தினிக்கு வழங்குவ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொல்லன் குளத்தைப் பயன்படுத்தித் தற்பொழுது சுமார் 100 ஏக்கரில் விவ சாயம் செய்யப்படுகின்றது. குளத்தில் மணல் நிரம்பிக் காணப்படுவதால் குளத்தின் முழுமையான பயனைப் பெற முடியாதுள்ளது. எனவே, குளத் தைத் தூர்வாரி அங்கு தேங்கியுள்ள மேலதிக மணலை அகற்றினால் மேல திகமாக இன்னும் 100 ஏக்கர் விவசாய நிலத்துக்கு நீர் வழங்க முடியும். ஆகவே, கொல்லன் குளத்தைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொல்லன் குள விவசாய வீதியில் பாலமொன்று இன்மையால் நெல் அறுவடையின் போது விவசாயிகள் தமது அறுவடையைப் பாதுகாப்பாக கொண்டுவர முடியாத நிலையில் உள்ளனர். அதேபோன்று பின்னியடி – கருக்காமுனை வீதியில் மாரி காலங் களில் மக்கள் பயணம் செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது. எனவே, கொல்லன் குள வீதியிலும், பின்னியடி – கருக்காமுனை வீதியிலும் பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் துறையில் பொது விளையாட்டு மைதானத்துக்குக் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை மைதானமாக பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றார்.

# மூதூர் உள்ளூராட்சி சபையை நகர சபையாகத் தரமுயர்த்துக!

## முன்னாள் உறுப்பினர் கோரிக்கை

(ஹஸ்பர் ஏ.எச்.)

மூதூர் உள்ளூராட்சி சபை நகர சபையாகத் தரமுயர்த்தப்பட வேண்டும். அதனோடு இணைந்த புதியதொரு உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மூதூர் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அதி உயர்பீட உறுப்பினருமான அமீர் சுல்தான் தாஹீஸ் தெரிவித்தார்.

சனத்தொகை அதிகரிப்பும், மக்களுக்ககான தேவைகள் அதிகரிப்பும் காரணமாக மக்களுடைய அபிவிருத்தி மற்றும் அத்தியவசிய தேவைகள் உடனடியாக நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனால் புதிய உள்ளூராட்சி மன்ற உருவாக்கத்தின் தேவை உணரப்பட்டுள்ளது.

திருகோணமலை சர்வோதயத்தில்



நடைபெற்ற மாவட்ட சிவில் அமைப்புக்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதுள்ள அரசு நாட்டில் மக்களுக்கான உரிமைசார், அபிவிருத்திசார் பிரச்சினைகளையும் உடனடியாக தீர்த்து வைப்பதில் கரிசனை கொண்டுள்ளது. பிராந்தியத்தில் வாழ்கின்ற மக்களின் இன நல்லுறவை பாதிக்காத வகையியில் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் அதிக சனத்தொகையையும், வாக்காளர்களையும், 13 வட்டாரங்களையும், 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் கொண்ட தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் உள்ளூராட்சி மன்றமாக மூதூர் பிரதேச சபை உள்ளது.

எனவே எமது மக்களின் தேவைகள் உணரப்பட்டு அதற்கான தீர்வாக அங்கு வாழும் மக்களோடும், கட்சிகளோடும் சிறந்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நியாயமான தீர்வாகப் புதிய உள்ளூராட்சி மன்ற தரமுயர்வும், புதிய உள்ளூராட்சி உருவாக்கமும் புதிய அரசால் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




# வீரஞ்சோலை வயல் காணிகளுக்குள் வன இலாகாவின் எல்லை கற்கள்!

(எஸ்.கீதபொன்கலன்)

குச்சவெளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (18) நடைபெற்றது. இதன்போது வீரஞ்சோலை வயல் காணிகளுக்குள் வன இலாகாவால் எல்லை கற்கள் இடப்பட்டதாக குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.புவிராஜனால் குற்றச் சாட்டு முன் வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை (19) சம்பந்தப்பட்ட அதிகாரிகள் களவிஜயம் மேற்கொண்டு புவிராஜன் கூறியது உண்மை என்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் பொது மக்களின் வயல் காணிகளை அரச திணைக்களங்களே அபகரிக்கும் விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இது தொடர்பில் அரசு என்ன தீர்மானத்தை எடுக்கவுள்ளது என்று தாம் அவதானித்துக் கொண்டிருக் கின்றனர் என்று பிரதேச விவசாயிகள் கூறுகின்றனர்.





# சுற்றுலாத் துறையை மேம்படுத்த முஸ்தீபு!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேசத்தின் சுற்றுலா துறையை மேம்படுத்தும் முகமாக திட்ட வரைவு ஒன்றை தயாரித்து எதிர்வரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பணம் செய்வதற்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகருப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த நிலையில் கிண்ணியா நகர சபை தவிசாளர் எம். எம். மஹ்தி தலைமையிலான குழுவினர் கிண்ணியா துறையாடி பெரிய பாலத்தின் கீழான பொழுதுபோக்கு பூங்காவை பார்வையிட்டுள்ளனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். கனி, நகர சபை செயலாளர் அனீஸ், நகர சபை உறுப்பினர்களான ரசாட் முகம்மட், ஸீமா ஹானிம் ஆகியோரும் முன்னாள் நகர சபை உறுப்பினர் கலிபத்துல்லா மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.



# ஈச்சிலம்பற்று திருவள்ளுவர் வித்தியாலயத்தின் பற்றாக் குறையை கேட்டறிந்த குகதாசன் எம்.பி.

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட மூதூர் வலயக் கல்வி பிரிவுக்கு உட்பட்ட ஈச்சிலம்பற்றில் உள்ள திருவள்ளுவர் வித்தியாலயத்துக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக் குறை உள்ளிட்ட பௌதீக வளங்கள் பற்றாக் குறை தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துரைத்தனர்.

பாடசாலையில் சுமார் 470 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் நேரத்தில் கணிதம், சமயம், விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் இன்மையால் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தனர்.

கட்டட வசதி உட்பட சிற்றூழியர் பற்றாக் குறை நிலவி வருகிறது என்றும் தெரிவித்தனர். இது தொடர்பான மகஜர் ஒன்றை பாடசாலை சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர்.

இதனை ஏற்ற நாடாளுமன்ற உறுப்பினர் இது விடயமாக ஆராய்ந்து தீர்வொன்றை முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.



# பூவரசங்குளம் அறநெறிப் பாடசாலைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சீருடைகள்!

வவுனியா – பூவரசங்குளம் ஸ்ரீபால முருகன் ஆலய அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் 30 மாணவர்களுக்கு 70 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், ஸ்ரீ பாலமுருகன் ஆலய நிர்வாகிகள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# மாற்றத்துக்கான பாதைத் திட்டத்தில் சிறுவர்களுக்கு மகிழ்வூட்டல் நிகழ்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் ஜெசாக் நிறுவனத்துடன் இணைந்து மாற்றத்துக்கான பாதை என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியுள்ளனர்.

இதன் நிறைவுக் கட்டமாக புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, அல்லிப்பளை கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மகிழ்வூட்டல் மற்றும் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர், ஜெசாக் நிறுவனத்தினர், சிறுவர் கழகத் தொண்டர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.








# 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிறுவர் கழகங்களைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இன்றைய சிறுவர்களின் கல்வியும் எதிர்காலமும் என்ற எண்ணக்கருவுக்கு அமைய சிறுவர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் யுனிசெப் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் ஜெசாக் நிறுவனத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ச.குணஜா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் , சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் ஜெசாக் நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.



# வரணியில் புதிதாகச் சந்தை கட்டுவதற்கு பிரதேச சபையின் நடவடிக்கை தேவை!

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

(த.சுபேசன்)

தென்மராட்சி கிழக்கில் ஏழு கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்துபட்ட பிரதேசமாகக் காணப்படுகின்ற வரணியில் கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள, நீண்ட காலமாக புனரமைப்பு இன்றிக் காணப்படும் வரணி சந்தை அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடியதான நவீன சந்தையாக மாற்றப்படவேண்டும்.

இயற்கையின் நண்பர்கள் இயக்கம் சாவகச்சேரிப் பிரதேச சபையிடம் இவ்வாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வரணிப் பொதுச் சந்தை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது. போதிய இடவசதி காணப்படுகின்ற போதிலும் சீராக சுற்றுவேலி இன்மையுடன், பாதுகாப்பற்ற பழைய கட்டடமாக இருப்பதால் காய்கனிகளைப் பாதுகாப்பதற்கான வசதி எதுவும் இல்லை. அத்துடன் அங்குள்ள மீன் விற்பனை செய்யும் கட்டடமானது வியாபாரிகளுக்கு ஏற்றவகையில் இல்லாமை மற்றும் இறைச்சிக்கடை உள்ள போதிலும் அது இயங்காமை உள்ளிட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு குறைபாடுகளுடன் வரணி சந்தை காணப்படுவதால் நுகர்வோரும், வியாபாரிகளும் மிகக்குறைந்த அளவிலேயே சந்தையை நாடுகின்றனர். நண்பகல் 12 மணியுடன் சந்தை வளாகம் வெறிச்சோடி விடுகின்றது. இதனால் சுமார் ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொடிகாமம் சந்தை மற்றும் வேறு உள்ளூர் தனியார் வர்த்தக நிலையங்களை மக்கள் நாடுகின்றனர்.

வரணிப் பொதுச் சந்தையை அனைத்து வசதிகளுடனும் புதிதாக அமைக்கும்போது வரணி பகுதியில் வசிக்கும் ஏறத்தாழ பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மற்றும் வியாபாரிகளும் பயனடைய முடியும். அதன்மூலம் சாவகச்சேரி பிரதேச சபை வருமானத்தை மேலும் அதிகரிக்கும் நிலையை அடையும்.

எனவே தற்போது புதிதாக பதவியேற்றுள்ள சாவகச்சேரிப் பிரதேச சபையானது வரணிச் சந்தையை முழுமையாகப் புதியதாக அமைப்பதற்கு உரிய திட்டவரைபை தயாரித்து அதனை வடக்கு மாகாண சபையின் ஆளுநர் ஊடாக நிதி கோரிப்பெற்று அமைக்குமாறு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கேட்டுக்கொள்கின்றது.– என்றுள்ளது.



# ஏர் இந்தியா விமானம் ஒன்றின் மூன்று சில்லுகளும் வெடித்தன!

மும்பையில் தரையிறங்கும் போது ஏர் இந்தியா விமானம் ஒன் றின் மூன்று சில்லுகள் வெடித்ததில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மழை காரணமாக ஓடுபாதையை விட்டு விமானம் விலகிச் சென்றபோது இவ்வாறு மூன்று சில்லுகளும் வெடித்துள்ளன.

விமானம் கொச்சியில் இருந்து மும்பை சென்று தரையிறங்கியபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஓடுபாதையைத் தாண்டி விமானம் சென்றபோது சில் லுகள் வெடித்ததால் விமானத்தின் இயந்திரத்தின் சுற்றுத் தகடு சேதம் அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்ப டுகிறது.

எவ்வாறாயினும், விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் பாதுகாப்பாக விமானத் தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள னர் என்று தகவல்கள் தெரிவிக்கின் றன.

இந்த நிலையில், விபத்தை தொடர்ந்து, விமானம் தற்போது பரி சோதனைக்காக நிலைத்தடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது என்று ஏர் இந் தியா தெரிவித்துள்ளது.

சம்பவத்துக்குப் பின்னர் மும்பை விமான நிலையத்தின் முதன்மை ஓடுபாதை சிறிது சேதமடைந்துள்ளது என்றும் இரண்டாம் நிலை ஓடுபாதை இயக்கத்தில் உள்ளதாகவும் கூறப்படு கிறது.

மும்பையில் இன்று தொடர்ச் சியான கனமழை காரணமாகப் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி, போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள் ளது.






# சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் ஸ்டாலின் அனுமதிக்கப்பட்டுள்ளார்!

திடீரென ஏற்பட்ட தலைச்சுற்றல் காரணமாக மு.க.ஸ்டாலின் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

வைத்தியசாலையின் மருத்துவ அறிக்கையின் படி, இன்று (21) காலை நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்த போது ஸ்டாலினுக்கு திடீரென தலைச்சுற்றல் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அவர் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலைச்சுற்றல் ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிவதற்குத் தேவையான பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைனுடன் அமைதிப் பேச்சில் ஈடுபட ரஷ்யா தயாராக உள்ளது!

### ரஷ்ய ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தகவல்



உக்ரைனுடன் அமைதிப் பேச்சில் ஈடுபட ரஷ்யா தயாராக உள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயத்தை ரஷ்ய ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் நேற்றுத் (20) தெரிவித்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

போர் நிறுத்தத்துக்குச் செல்லாவிட்டால் ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதித்து, ரஷ்யா தனிமைப்படுத்தப்படும் என எச்சரித்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

'உக்ரைன் விவகாரத்தில் அமைதியைக் கடைப்பிடித்து விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதே தனது விருப்பம் என்று ஜனாதிபதி விளாடிமீன் புடின் பலமுறை தெரிவித்துவிட்டார்.

இதை அவ்வளவு எளிதில் கையாள முடியாது. கடுமையான முயற்சிகள் மற்றும் நீண்ட நடைமுறையின் மூலமே நிறைவேற்ற முடியும். உக்ரைனுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட ரஷ்யா தயாராகவுள்ளது.

ஆனால், ரஷ்யா நிர்ணயித்த இலக்குகளை அடையாமல் இதைச் சாத்தியப்படுத்த முடியாது. அதில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உக்ரைனுடனான போரை 50 நாள்களுக்குள் நிறுத்தவில்லை என்றால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அண்மையில் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இணையக் கோளாறு காரணமாக அமெரிக்க விமான சேவைகள் ரத்து!




அமெரிக்காவின் அலாஸ்கா ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் இணையக் கோளாறு காரணமாக அதன் சேவைகளை ரத்து செய்துள்ளது.

உள்ஊர் நேரப்படி நேற்று இரவு (20) ஏற்பட்ட கோளாறு காரணமாக அதன் கணினிக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டது என்று அலாஸ்கா ஏர் குழுமம் தெரிவித்துள்ளது.

எனவே தற்காலிகமாக தனது அனைத்து விமானச் சேவைகளையும் ரத்து செய்வதாக அலாஸ்கா ஏர் லைன்ஸ் தெரிவித்துள்ளது.


அதன்படி மொத்தமாக 325 விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அலாஸ்கா ஏர்லைன்ஸ் விமானங்களின் வருகையைத் திட்டமிட்டுள்ள அனைத்து விமான நிலையங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவே தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை, அலாஸ்கா ஏர் குழுமம் வெளியிடவில்லை. சுமார் 300 விமானங்களைக் கொண்டுள்ளது அலாஸ்கா ஏர் குழுமம்.

கடந்த மாதம் நடந்த இணைய ஊடுருவலால் அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான ஹவாயியன் ஏர்லைன்ஸின் விமானச் சேவைகள் பாதிப்புக்குள்ளாகின. ஊடுருவல் காரணமாக ஏற்பட்ட பொருளாதார இழப்பை இன்னும் கணக்கிடுவதாக நிறுவனம் குறிப்பிட்டது.

# பங்களாதேஷ் விமானப்படைக்கு சொந்தமான விமானம் வெடித்தது!



பங்களாதேஷில் அந்த நாட்டு விமானப்படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உத்தரா - டயபாரியில் உள்ள மைல்ஸ்டோன் கல்லூரி வளாகத்தில் உள்ள ஒரு கட்டடத்தின் மீதி விமானம் மோதி வெடித்து தீப்பிடித்துள்ளது.

பயிற்சி விமானம் மதியம் 1:06 மணிக்கு புறப்பட்டு, புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான கு-7 டீபுஜ விமானம் விமானப் படைக்கு சொந்தமானது என்பதை பங்காளதேஷ் இராணுவத்தின் மக்கள் தொடர்பு அலுவலகம் உறுதிப் படுத்தியுள்ளது.


கனடா முரசு
திங்கட்கிழமை | 21/07/2025

## பாலியல் தாக்குதல்; வாகனச் சாரதி கைது

டொரொண்டோ நகரின் மேற்குப் பகுதியில் இரு பெண்கள் மீது பாலியல் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒரு ரைட்ஷேர் வாகன ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சனிக்கிழமை வெளி

C02▸





# கனடா மீது மேலும் வரி எச்சரிக்கின்றார் ட்ரம்ப்!

**கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருள்களுக்கும் 35 வீத வரி விதிக்கத் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**தற்போது இடம்பெற்று வரும் இருநாட்டு வர்த்தக பேச்சுவார்த்தைகள் நடுவே அவர் இந்த திடீர் அச்சுறுத்தலை வெளியிட்டுள்ளார்.**

இந்த அறிவிப்பு, கனடிய பிரதமர் மார்க் கார்னிக்கு எழுதிய கடிதம் ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த கடிதத்தை ட்ரம்ப் தனது Truth Social சமூக ஊடக பக்கத்தில் இரவில் பகிர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

“உங்கள் நாடு அல்லது உங்கள் நாட்டுக்குள் உள்ள நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை அமெரிக்காவில் உற்பத்தி செய்யத் தீர்மானித்தால் எந்தவிதமான வரியும் விதிக்கப்படமாட்டாது” என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப், இந்த 35 வீத வரிவிதிப்பு ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும், கனடா பதிலடி எடுத்தால் இது மேலும் உயர்த்தப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

கனடாப் பிரதமர் கார்னியின் அலுவலகம், அவர் இந்தக் கடிதத்தை அவர் பெற்றுள்ளார் என உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, கனடிய தொழிலாளர்களையும் நிறுவனங்களையும் பாதுகாப்பதில. தாம் உறுதியாக இருக்கின்றார் என பிரதமர் கார்னி தனது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் காணாமல்போன கனேடியச் சிறுமி சடலமாக மீட்பு!

அமெரிக்காவின் நியூயார்க்கில் மாயமான கனேடிய சிறுமி உயிரற்ற நிலையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார்ர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 10.00 மணியளவில், நியூயோர்க்கிலுள்ள Lake George என்னுமிடத்தில் வாழும் கனேடியரான லூசியானோ (Luciano Frattolin - வயது 45), தனது மகளான மெலினா (Melina Frattoli - வயது 9) ஐக் காணவில்லை எனப் பொலிஸாரிடம் புகாரளித்துள்ளார்.

அவள் கடத்தப்பட்டிருக்கக்கூடும் என சந்தேகம் எழுந்ததைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.30 மணிக்கு ஆம்பர் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், Ticonderoga என்னுமிடத்தில், மெலினாவின் உயிரற்ற உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெலினாவுக்கு என்ன நடந்தது என்பது குறித்த தகவல்களை பொலிஸார் வெளியிடவில்லை.





# டொரொண்டோவில் வீடொன்றில் தீ! விபத்தில் 70 வயது முதியவர் சாவு!!

டொரொண்டோ நகரின் கிழக்குப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வீடொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில், 70 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் 70 வயதுடைய பெண் ஒருவர் கடுமையாகக் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம், ஜெராட் ஸ்ட்ரீட் Gerrard Street East மற்றும் கிளென்சைட் Glenside Avenue பகுதியில், நள்ளிரவில் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

கட்டடத்தின் நான்காவது மாடியில் "தீவிர புகை" இருப்பதைக் கண்டதாகவும், ஒருவர் மரணமடைந்த நிலையில் கண்டுபிடித்ததாகவும் பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

அத்துடன், 70 வயதுடைய பெண் ஒருவர் மிக கடுமையான நிலைமையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மற்றும் மூன்றாவது நபர் ஒருவரும் சிறிய காயங்களுடன் சிகிச்சை பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்திற்கான காரணம் இது வரை தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்த தீ பாதுகாப்பு ஆணையர் அலுவலகம் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.




## பாலியல்...

( C01 தொடர்ச்சி)

யிடப்பட்ட செய்திக்குறிப்பில், வெஸ்டன் Weston Road மற்றும் எக்லின்டன் Eglinton Avenue West பகுதியில் கடந்த திங்கட்கிழமையன்று இந்தச் சம்பவம் நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு பெண் பயணிகள் தங்களது பயண துரத்தை நிறைவு செய்து வாகனத்திலிருந்து இறங்கிய பின்னர் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஓட்டுநர் அருகிலுள்ள ஒரு கட்டடத்தின் மாடிப் பகுதிக்குள் அவர்களைத் தொடர்ந்தார் எனவும், அங்கேயே இருவரையும் பாலியல் தாக்குதல் செய்துவிட்டு வாகனத்தில் தப்பிச் சென்றார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் பின்னர், டொரொண்டோவைச் சேர்ந்த 30 வயதுடைய மொஹமட் அப்துல்மாலிக் பாபிகர் என்பவர் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் மீது இரு பாலியல் தாக்குதல் குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் இன்னும் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

அவர் ஒகஸ்ட் 25 ஆம் திகதி ஒன்ராறியோ நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக கூடுதல் பாதிப்படைந்தோர் இருக்கக்கூடும் எனப் பொலிஸார் கவலை வெளியிட்டுள்ளனர்.

# ஒட்டாவா இளைஞன் ஒன்ராறியோவில் ஆற்றில் வீழ்ந்து மூழ்கிப் பரிதாபப் பலி




கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள St. Lawrence ஆற்றில் சனிக்கிழமை மாலை ஒட்டாவா இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

ஒன்ராறியோ மாகாண பொலிஸார் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

கிங்ஸ்டனுக்கு கிழக்கே 35 கிலோ மீட்டரில் அமைந்த கனனொக்யூ (Gananoque) நகரை அண்மித்த பகுதியில், மாலை 6.30 மணியளவில் ஒரு நபர் நின்ற படகிலிருந்து தவறி கீழே விழுந்தார் எனப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவத்தின் போது, அவர் எந்த வொரு உயிர்காப்பு அங்கியும் அணிந்திருக்கவில்லை எனவும், சில நிமிடங்களில் அவர் நீரில் மிதந்த நிலையில் காணப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நிபியன் (Nepean) பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மீட்புப் படையினரின் தீவிர முயற்சிகளும் பயனளிக்கவில்லை எனவும், அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துவிட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். அவரது தனியுரிமையை மதித்து பெயர் வெளியிடப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடற்கூறு பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், விசாரணை தொடருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மரணம், இந்த கோடைகாலத்தில் கிழக்கு ஒன்ராறியோ மற்றும் மேற்கு கெபெக் பகுதிகளில் ஏற்பட்ட பல நீரில் மூழ்குதல் சம்பவங்களில் ஒன்றாகும் எனத்தெரிவிக்கப்படுகின்றது.




# கனடாவில் காணாமல் போன குழந்தை பாறைக் குன்றிலிருந்து சடலமாக மீட்பு

கனடாவின் கேப் பிரிட்டன் பகுதியில் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட ஒரு குழந்தை சனிக்கிழமை நீரில் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கேப் பிரிட்டன் பிராந்திய பொலிஸார் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

நியூ வாட்டர்ஃபோர்டு (New Waterford), நோவா ஸ்கோஷியா பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் ஒரு குழந்தை காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டது.

குழந்தை ஒட்டிசம் குறைபாடுடன் இருந்ததாகவும், சமையலறை ஜன்னல் வழியாக வெளியில் தப்பிச் சென்றதை தாய் முதலில் கவனித்தார் எனவும் கூறப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகள், பிற்பகல் 2 மணிக்கு அருகிலுள்ள பாறைக்குன்றுக்கு அருகே நீரில் குழந்தையை கண்டுபிடித்தனர்.

அவசர மருத்துவ ஊழியர்கள் அந்த இடத்துக்கு விரைந்து வந்தாலும், குழந்தையின் உயிரைக் காக்க முடியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து விரிவான விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது.